முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

மட்டம் I பரீட்சை – 2025 யூலை

(101) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

2025-08-02
காலை
[9.00 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

பக்கங்கள் : 10
வினாக்கள் : 06

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே விடையளித்தல்** வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச்சொல் செவ்வை நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **வினைச்சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் **வரைவிலக்கணத்தின்** அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக*

1.1 நிதிக் கணக்கீட்டின் ஒரு நோக்கமாக (objective) அமைவது :

(1) வணிகப் பொருள்களின் விற்பனை விலையைத் தீர்மானிப்பதாகும்.

(2) வணிகத்தின் நிதி நிலையை விளங்கிக்கொள்வதாகும்.

(3) ஊழியர்களின் செயற்திறனை இனங்காண்பதாகும்.

(4) வணிகத்தின் செலவினங்களைக் குறைப்பதாகும்.

1.2 பின்வருவனவற்றுள் நிதி நிலைக் கூற்றின் மூலகங்களை (elements) உள்ளடக்கிய தொகுதி எது?

(1) சொத்துக்கள், பரிப்புக்கள், செலவினங்கள்.

(2) சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம்.

(3) சொத்துக்கள், பரிப்புக்கள், உரிமையாண்மை.

(4) சொத்துக்கள், உரிமையாண்மை, செலவினங்கள்.

1.3 பின்வருவனவற்றுள் நிதித் தகவல்களின் அடிப்படைத் தரம்சார் பண்பாக (characteristic) அமைவது எது?

(1) தொடர்ந்தியங்கும் என்ற கோட்பாடு. (2) தொடர்புடைமை.

(3) அட்டுறு அடிப்படை. (4) இரகசியத்தன்மை.

1.4 வாடிக்கையாளர் ஒருவர் வங்குரோத்து நிலையை அடைந்த காரணத்தால் கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து வரவேண்டியிருந்த ரூபா 2,000/- தொகையானது அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்யப்பட்டது. இதனுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு:

(1) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு. (2) அட்டுறு எண்ணக்கரு.

(3) தொடர்ந்தியங்கும் என்ற எண்ணக்கரு. (4) வரலாற்றுக் கிரய எண்ணக்கரு.

1.5 கீழ்வரும் தகவல்கள் 2025 மார்ச் மாத **ABC டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

	ரூ.
2025 மார்ச் 31 இல் நிகரச் சொத்துக்கள்	6,800,000
2025 மார்ச் 01 இல் நிகரச் சொத்துக்கள்	4,200,000
மாதத்தின் காலப்பகுதியில் எடுப்பனவுகள்	500,000
மாதத்தின் காலப்பகுதியில் உள்ளிடப்பட்ட மேலதிக மூலதனம்	400,000

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த மாதத்திற்கான வணிகத்தின் நிகர இலாபமாக அமைவது :

(1) ரூ. 2,700,000/-. (2) ரூ. 1,700,000/-. (3) ரூ. 1,800,000/-. (4) ரூ. 2,500,000/-.

1.6 உங்களுக்கு தனியுடமை வியாபாரம் ஒன்றின் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான ஊடுசெயல் ஒன்றின் தாக்கம் கீழே தரப்பட்டுள்ளது :

(ரூ.)

சொத்துக்கள்			=	**உரிமையாண்மை**	+	**பரிப்புக்கள்**
தொக்கு	**+**	**காசு**				
- 35,000		+45,000	=	+10,000	-	-

மேற்படி தகவல்களின் அடிப்படையில், மேலே தரப்பட்ட கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கு மிகவும் பொருத்தமான ஊடுசெயலாக அமைவது :

(1) உரிமையாளர் அவரது சொந்தப் பாவனைக்காக ரூ. 45,000/- பெறுமதியான பொருள்களை எடுத்துள்ளதுடன், எடுக்கப்பட்ட பொருள்களின் கிரயம் ரூ. 35,000/- ஆகும்.

(2) ரூ. 35,000/- கிரயமான பொருள்கள் ரூ. 45,000/- காசுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(3) ரூ. 35,000/- கிரயமான பொருள்கள் ரூ. 45,000/- கடனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(4) ரூ. 45,000/- கிரயமான பொருள்கள் ரூ. 35,000/- காசுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

1.7 வியாபாரக் கடன்கொடுத்தோர் ஒருவருக்கான தீர்ப்பனவு காரணமாக கணக்கீட்டு மூலகங்களில் ஏற்படும் சரியான தாக்கத்தைக் கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க:

(1) சொத்துக்களில் அதிகரிப்பும் பரிப்புக்களில் அதிகரிப்பும்.

(2) சொத்துக்களில் குறைவும் உரிமையாண்மையில் குறைவும்.

(3) சொத்துக்களில் குறைவும் பரிப்புக்களில் குறைவும்.

(4) சொத்துக்களில் அதிகரிப்பும் பரிப்புக்களில் குறைவும்.

1.8 கீழ்வருவனவற்றில் எது பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது?

(1) காசு அடிப்படையில் மீள் விற்பனைக்காக பொருள்கள் கொள்வனவு செய்யப்படுதல்.

(2) கடனடிப்படையில் அலுவலகப் பயன்பாட்டிற்காக அலுவலக உபகரணமொன்று கொள்வனவு செய்யப்படுதல்.

(3) காசு அடிப்படையில் அலுவலகப் பயன்பாட்டிற்காக மோட்டார் வாகனமொன்று கொள்வனவு செய்யப்படுதல்.

(4) கடனடிப்படையில் மீள் விற்பனைக்காக பொருள்கள் கொள்வனவு செய்யப்படுதல்.

1.9 கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களின் திரும்பலைப் பதிவு செய்வதற்குக் கொள்வனவாளரால் பயன்படுத்தப்படும் மூல ஆவணம் :

(1) வரவுக் குறிப்பு. (2) விற்பனை விபரப் பட்டியல்.

(3) செலவுக் குறிப்பு. (4) பொருள் பெறுவனவுக் குறிப்பு (GRN).

1.10 கீழ்வருவனவற்றில் இரட்டைப் பதிவுக் கணக்கீட்டு முறைமை தொடர்பில் சரியான கூற்று எது?

(1) ஒவ்வொரு ஊடுசெயலும் ஒரு கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்படுகிறது.

(2) ஒவ்வொரு ஊடுசெயலும் பேரேட்டுக் கணக்கில் இரு முறை பதிவு செய்யப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு ஊடுசெயலும் காசு அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது.

(4) ஒவ்வொரு ஊடுசெயலும் ஆகக்குறைந்தது இரண்டு கணக்குகளில் பதிவு செய்யப்படுகிறது.

கீழே **1.11** *தொடக்கம்* **1.15** *வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக.*

1.11 நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமை என்பது தீர்மானமெடுத்தலுக்குத் தேவையான ஒருங்கிணைந்த தகவல் முறைமையாகத் தொழிற்படும் ஒரு கணினிமயப்படுத்தப்பட்ட முறைமையாகும்.

1.12 கட்டடக் கணக்கு என்பது ஒரு பெயரளவுக் (nominal) கணக்கிற்கான ஓர் உதாரணம் ஆகும்.

1.13 ஒரு பொறுப்பு (liability) என்பது கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக நிறுவனத்தினால் கட்டுப்படுத்தப்பட்ட தற்கால பொருளாதார வளமாகும்.

1.14 வரலாற்றுக் கிரய எண்ணக்கருவின்படி, உரிமம் ஒன்றின் சொத்துக்களின் பெறுமதியானது கொள்வனவுக் கிரயம் அல்லது சொத்துக்களின் நிர்மாணத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது.

1.15 "தோற்றத்திலும் பார்க்க கருத்து மேலானது" என்ற எண்ணக்கருவின் கருத்தானது, பரிவர்த்தனைகள் அவற்றின் பொருளாதார யதார்த்தத்தை விடவும் அவற்றின் சட்ட வடிவத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதாகும்.

1.16 தொடக்கம் **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

1.16 காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் (காசேட்டின்) மீதிக்கும் வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதிக்குமிடையிலான கால வேறுபாட்டிற்கான (time difference) இரண்டு (02) சாத்தியமான காரணங்களைக் குறிப்பிடுக.

1.17 நடைமுறைச் சொத்துக்கும் நடைமுறையல்லாச் சொத்துக்குமிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

1.18 கீழ்வரும் ஊடுசெயல்களைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் சரியான மூல ஆவணத்தை அடையாளம் காண்க :

(1) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து ரூபா 5,000/- கிடைக்கப் பெற்றுள்ளது.

(2) கடனடிப்படையில், மீள்விற்பனைக்காக ரூபா 45,000/- பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

1.19 உரிமம் ஒன்றிற்கு வணிக நெறிமுறைகள் (business ethics) ஏன் முக்கியமானவை என்பதற்கான இரண்டு (02) காரணங்களைக் குறிப்பிடுக.

1.20 உரிமம் ஒன்றிற்கு கணக்கீட்டு எண்ணக்கருக்களின் அவசியத்திற்கான இரண்டு (02) காரணங்களைப் பட்டியலிடுக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

பகுதி A முடிவு

பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா 02

ரஜரட்ட ரூபிங் என்பது பல வகையான மேற்கூரை ஓடுகளைத் தயாரிக்கின்ற ஒரு நிறுவனமாகும். 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ரஜரட்ட ரூபிங்** கம்பனியின் கணக்கேடுகளில் இருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

விபரம்	ரூபா
2024 ஏப்ரல் 01 இல் மூலப்பொருள் இருப்பு	150,000
ஆண்டின் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருள்	5,250,000
மூலப்பொருள் உள்வந்த வண்டிக்கூலி	250,000
2024 ஏப்ரல் 01 இல் புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது)	180,000
உற்பத்திப் பணியாளர்களுக்கான நேர் கூலிகள்	1,900,000
மின்சாரம்	740,000
நீர்	250,000
தொழிற்சாலைப் பாதுகாப்புக் கட்டணங்கள்	360,000
இயந்திரப் பழுதுபார்ப்பு	80,000
வாடகை	600,000
தேய்மானம் - பொறி மற்றும் இயந்திரம்	200,000
தேய்மானம் - மோட்டார் லொறி	540,000

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2025 மார்ச் 31 இல் இறுதித் தொக்கு மீதிகள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன :

விபரம்	(ரூபா)
மூலப்பொருள் இருப்பு (கிரயத்தில்)	80,000
புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது)	160,000

(2) பின்வரும் செலவினங்கள் கீழ்வருமாறு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும் :

செலவினங்கள்	தொழிற்சாலை	அலுவலகம்
மின்சாரம்	60%	40%
நீர்	90%	10%
வாடகை	75%	25%

(3) உற்பத்தி செய்யப்பட்ட மேற்கூரை ஓடுகள், உற்பத்திக் கிரயத்தில் 18% இலாபம் வைத்து வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

(4) பொறி மற்றும் இயந்திரமும், மோட்டார் லொறியும் தொழிற்சாலை நோக்கங்களுக்காகவே முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

(5) நேர் கூலிகளுக்கு மேலதிகமாக, உற்பத்திப் பணியாளர்கள் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு மேற்கூரை ஓட்டிற்கும் ரூபா 5/- ஊக்கத்தொகை (incentive) பெற உரித்துள்ளது என்பதுடன், ஆண்டின் காலப்பகுதியில் 200,000 ஓடுகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன.

நீங்கள் செய்ய வேண்டியது :

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ரஜரட்ட ரூபிங்** கம்பனியின் உற்பத்திக் கிரயக் கூற்றை (உற்பத்திக் கணக்கு)த் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

வினா 03

ரிஸ்னி டிரேடர்ஸ் என்பது ஆரம்ப மூலதனமாக ரூபா 2,500,000/- இனைக் காசாக முதலீடு செய்து 2024 ஏப்ரல் 01 இல் **ரிஸ்னி** என்பவரால் தொடங்கப்பட்ட ஒரு தனியுடமை வியாபாரமாகும்.

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் (காசேடு) பொழிப்பு கீழ்வருமாறு :

காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு)

பெறுவனவுகள்	வரவு (ரூபா)	கொடுப்பனவுகள்	செலவு (ரூபா)
ஆரம்ப மூலதன முதலீடு	2,500,000	காசுக் கொள்வனவுகள்	2,850,000
வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள்	3,900,000	வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள்	2,250,000
காசுக்கு விற்பனைகள்	4,800,000	நிலையான வைப்பொன்றில் முதலீடு	500,000
		சம்பளங்களும் கூலிகளும்	800,000
		சில்லறைக் காசுக்கு மாற்றப்பட்ட தொகை	150,000
		விநியோக வான் ஒன்றின் கொள்வனவு (2025 சனவரி 01 இல் கொள்வனவு செய்யப்பட்டது)	3,200,000
		மின்சாரம் மற்றும் நீர்ச் செலவினங்கள்	400,000
		தொலைபேசி மற்றும் இணையக் கட்டணங்கள்	300,000
		விளம்பரப்படுத்தல் செலவினங்கள்	120,000
		அலுவலக வாடகை	400,000
		மீதி C/F	230,000
	11,200,000		**11,200,000**
மீதி B/F	230,000		

(2) 2025 மார்ச் 31 இல் வருமதி மற்றும் சென்மதி மீதிகள் கீழ்வருமாறு :

	ரூபா
வியாபாரக் கடன்பட்டோர்	1,900,000
வியாபாரக் கடன்கொடுத்தோர்	2,500,000
அட்டுறு தொலைபேசி மற்றும் இணையக் கட்டணங்கள்	15,000

(3) மோட்டார் வாகனங்கள் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும்.

(4) கீழ்வரும் செலவினங்கள் சில்லறைக் காசிலிருந்து செலுத்தப்பட்டுள்ளன :

- காகிதாதி : ரூபா 12,500/-.
- பிரயாணம் : ரூபா 7,500/-.
- அமய கூலிகள் : ரூபா 55,000/-.

(5) ஒரு நிலையான வைப்பு 2024 அக்டோபர் 01 இல் திறக்கப்பட்டது. இதற்கான ஆண்டு வட்டி வீதம் 10% ஆகும். ஆண்டிற்கான வட்டி 2025 ஏப்ரலில் கிடைக்கப் பெற்றது.

(6) 2025 மார்ச் 31 இல் தொக்குகள் எதுவும் இல்லை.

நீங்கள் செய்ய வேண்டியது :

2025 மார்ச் 31 இல் **ரிஸ்னி டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

வினா 04

உதவிக் கணக்காளரால் தயாரிக்கப்பட்ட 2025 மார்ச் 31 இலான **அமயா ஸ்டோர்ஸின்** பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் ரூபா 33,100/- ஆனது தொங்கற் கணக்கிற்கு வரவுப் பதிவு செய்யப்பட்டு, வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. **அமயா ஸ்டோர்ஸ்** வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணுகிறது.

பின்னர், வித்தியாசத்திற்கான காரணங்களாக கீழ்வருவன அடையாளங் காணப்பட்டன :

(1) 2024 ஏப்ரல் 01 இல் மேற்கொள்ளப்பட்ட ரூபா 60,000/- பெறுமதியான அலுவலக உபகரணத்தின் கொள்வனவானது கொள்வனவுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. அலுவலக உபகரணம் மீதான பொருத்தமான தேய்மானக் கட்டணமானது நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 25% ஆகும். இந்த அலுவலக உபகரணத்தின் தேய்மானக் கட்டணம் தொடர்பில் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(2) காசுக் கொள்வனவு ரூபா 4,000/- ஆனது கொள்வனவுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை. எவ்வாறாயினும் இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டது.

(3) வாடகைச் செலவினம் ரூபா 15,000/- தவறாக வாடகை வருமானக் கணக்கிற்கு செலவுப் பதிவு செய்யப்பட்டிருந்த அதே வேளை, அது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(4) 2025 மார்ச் மாதத்திற்காக செலுத்த வேண்டிய தொலைபேசிக் கட்டணம் ரூபா 6,000/- ஆனது பேரேட்டுக் கணக்குகள் இரண்டிலும் இருமுறை பதிவு செய்யப்பட்டிருந்தது.

(5) கொள்வனவு நாட்குறிப்பேட்டின் மொத்தம், ரூபா 14,500/- இனால் மிகைப்படுத்திக் குறிப்பிடப் பட்டிருந்தது.

(6) மின்சாரச் செலவினம் ரூபா 4,500/- ஆனது மின்சாரச் செலவினக் கணக்கில் ரூபா 5,400/- ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள். (07 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கு. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 05

(A) **ரவி** என்பவர் 2025 மார்ச் 01 இல் சில்லறை வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார். இவ்வியாபாரம் தொடர்பில் 2025 மார்ச் மாத காலப்பகுதியில் கீழ்வரும் பரிவர்த்தனைகள் இடம்பெற்றிருந்தன :

(1) **ரவி** ஆரம்ப மூலதனமாக ரூபா 500,000/- இனை காசாக இட்டுள்ளார்.

(2) ரூபா 150,000/- பெறுமதியான அலுவலக உபகரணம் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

(3) மீள்விற்பனைக்காக **XYZ Ltd.** இடமிருந்து கடனடிப்படையில் ரூபா 80,000/- பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

(4) ரூபா 50,000/- கிரயமான பொருள்கள் ரூபா 70,000/- இற்கு கடனடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன.

(5) மாதத்தின்போது **ரவியால்** எடுக்கப்பட்ட காசு ரூபா 3,000/-.

நீங்கள் செய்ய வேண்டியது :

கீழ்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் மேற்படி ஒவ்வொரு பரிவர்த்தனையினதும் தாக்கத்தைக் **குறிப்பிடுக.**

[அலுவலக உபகரணம் + தொக்கு + கடன்பட்டோர் + காசு = உரிமையாண்மை (மூலதனம்) + பரிப்புக்கள்]

(05 புள்ளிகள்)

(B) 2025 மார்ச் 31 இல், **ABC Traders** வங்கிக் கூற்றின்படி ரூபா 42,500/- என்ற சாதகமான மீதியைக் கொண்டிருந்த அதே வேளை, காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கானது வரவு (சாதகமான) மீதியான ரூபா 26,500/- இனைக் காட்டியது.

பின்னர், கணக்குகள் நிறைவேற்றுநரால் வங்கிக் கூற்றின் மீதிக்கும் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்குமிடையேயான வேறுபாட்டிற்கான காரணங்களாக பின்வருவன இனங்காணப்பட்டன :

(1) 2025 மார்ச் 25 இல் வழங்குநர் ஒருவருக்கு ரூபா 15,000/- பெறுமதியான ஒரு காசோலை வழங்கப்பட்டிருந்தது எனினும், அக்காசோலை 2025 மார்ச் 31 வரையிலும் கொடுப்பனவுக்காக வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

(2) ரூபா 20,000/- ஆனது வாடிக்கையாளர் ஒருவரால் **ABC Traders** இன் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்டிருந்தது எனினும் இந்தத் தொகை காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(3) 2025 மார்ச் 28 இல் வங்கியால் வரவு வைக்கப்பட்டிருந்த வங்கிக் கட்டணங்கள் ரூ. 1,000/- தொடர்பில் காசேட்டில் கவனஞ் செலுத்தப்படவில்லை.

(4) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட ரூபா 5,000/- பெறுமதியான ஒரு காசோலை 2025 மார்ச் 30 இல் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது எனினும் அது 2025 மார்ச் 31 வரை தேறியிருக்கவில்லை.

(5) சேமிப்புக் கணக்கொன்றிற்கான வட்டி வருமானம் ரூபா 2,000/- ஆனது வங்கிக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் அது தொடர்பில் காசேட்டில் கவனஞ் செலுத்தப்படவில்லை.

(6) பெற்றுக்கொள்ளப்பட்ட கடனொன்று தொடர்பில் கடன் தவணைக் கட்டணம் ரூபா 15,000/- இனை வங்கி கழித்திருந்தது. இது காசேட்டில் பதியப்படவில்லை.

நீங்கள் செய்ய வேண்டியவை :

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு). (03 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா 06

நாதன் டிரேடர்ஸ் என்பது **நாதன்** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரம் ஆகும். 2025 மார்ச் 31 இல் **நாதன் டிரேடர்ஸ்** இன் பரீட்சை மீதி கீழ்வருமாறு :

நாதன் டிரேடர்ஸ்

2025 மார்ச் 31 இல் பரீட்சை மீதி *(ரூபா '000)*

விபரம்	வரவு	செலவு
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :		
காணியும் கட்டடமும் (காணிப் பெறுமதி – ரூபா 2,400,000/-)	8,400	
தளபாடம்	4,000	
மோட்டார் வாகனங்கள்	2,500	
2024 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் :		
கட்டடங்கள்		600
தளபாடம்		1,000
மோட்டார் வாகனங்கள்		625
விற்பனைகள்		119,680
கொள்வனவுகள்	74,500	
2024 ஏப்ரல் 01 இல் தொக்கு	9,500	
கையிலுள்ள காசும் வங்கியில் உள்ள காசும்	310	
வியாபார வருமதிகள்	12,080	
வியாபார சென்மதிகள்		8,120
வங்கிக் கடன்		3,000
சம்பளங்களும் கூலிகளும்	18,400	
பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவினங்கள்	900	
தொலைபேசி மற்றும் நீர்க் கட்டணங்கள்	750	
செலுத்திய களஞ்சிய வாடகை	1,650	
பாதுகாப்புக் கட்டணங்கள்	550	
காப்புறுதிச் செலவினங்கள்	120	
மின்சாரச் செலவினங்கள்	1,280	
அலுவலகச் செலவினங்கள்	1,350	
பயணம் மற்றும் போக்குவரத்துச் செலவினங்கள்	1,220	
2024 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு		4,485
மொத்தம்	**137,510**	**137,510**

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2025 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கு ரூபா 5,200,000/-.

(2) 2025 சனவரி 01 தொடக்கம் 2025 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக 2025 சனவரி 01 இல் ஒரு தீ அபாயக் காப்புறுதி பெற்றுக் கொள்ளப்பட்டது. முழுத் தொகையான ரூபா 120,000/- ஆனது காப்புறுதிச் செலவினக் கணக்கிற்கு வரவுப் பதிவு செய்யப்பட்டது.

(3) 2024 அக்டோபர் 01 இல், 12% வருடாந்த வட்டி வீதத்தில் வங்கி ஒன்றிடமிருந்து ரூபா 3,000,000/- கடன் பெற்றுக் கொள்ளப்பட்டது. கடனின் மூலதன மீள்கொடுப்பனவுகள் 2025 ஏப்ரல் 01 இலிருந்து ஆரம்பித்தன. 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகச் செலுத்த வேண்டிய வட்டி தொடர்பில் கணக்கேடுகளில் பதியப்படவில்லை.

(4) கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் பின்வருமாறு தேய்மானஞ் செய்வது வணிகத்தின் கொள்கையாக உள்ளது :

கட்டடங்கள்	:	ஆண்டிற்கு 05%
தளபாடம்	:	ஆண்டிற்கு 20%
மோட்டார் வாகனங்கள்	:	ஆண்டிற்கு 25%

(5) 2025 மார்ச் மாதத்திற்கான களஞ்சிய வாடகை ரூபா 150,000/- ஆனது 2025 மார்ச் 31 வரை செலுத்தப்படவில்லை.

(6) **நாதன்** ரூபா 80,000/- இனை அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்யத் தீர்மானித் திருந்ததுடன் 2025 மார்ச் 31 இல் எஞ்சியுள்ள வியாபார வருமதிகள் மீதியில் 2% ஏற்பாட்டைச் செய்வதற்கும் தீர்மானித்திருந்தார்.

நீங்கள் செய்ய வேண்டியவை :

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்க** :

(a) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று. (12 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இல் நிதி நிலைக் கூற்று. (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C முடிவு

செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
அறிவு (1)	விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல்	வரைக (Draw)	வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல்
		தொடர்புபடுத்துக (Relate)	தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல்
		கூறுக/ குறிப்பிடுக(State)	திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல்
		அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)	கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல்
		நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)	தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
முற்றடக்கம் (2)	யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும்	ஏற்பிசைவு செய்க (Recognize)	அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல்
		பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)	விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல்
		விளக்குக (Describe)	பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும்
		விபரிக்குக (Explain)	உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல்
		பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)	சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பிரயோகம் (3)	புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும்	கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)	வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல்
		வரைக (Graph)	வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல்
		மதிப்பிடுக (Assess)	பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல்
		தீர்க்குக (Solve)	கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல்
		தயாரிக்குக (Prepare)	குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல்
		எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)	உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல்
		கணிக்குக / கணிப்பிடுக (Calculate)	கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல்
		பிரயோகிக்குக (Apply)	நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பகுப்பாய்வு (4)	யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும்	தொடர்பாடுக(Communicate)	தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல்
		சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)	முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல்
		வேறுபடுத்துக (Contrast)	வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல்
		ஒப்பிடுக (Compare)	ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல்
		கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)	விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல்
		வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)	சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல்
		பகுப்பாய்வு செய்க (Analyze)	தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல்